**ஜூலை – 05**

# TNPSC துளிகள்

- வில்மிங்டன் பிரகடனத்தின் கீழ் இந்திய-பசிபிக் பகுதியில் கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் முதன்முதலில் இணைந்து 'கடல் பாதுகாப்பு குறித்து குவாட் நாடுகள்' என்ற திட்டத்தினைத் தொடங்கியுள்ளன.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் தயாரிக்கப்பட உள்ள அனைத்து இரு சக்கர வாகனங்களிலும் ABS என்ற (Anti-lock Braking System) என்ற சக்கர சுழற்சியைக் கட்டுப்படுத்தாத வாகன நிறுத்த அமைப்பு பொறுத்துவதைக் கட்டாயமாக்கும் ஒரு விதிமுறையைச் சேர்ப்பதற்கான திருத்த வரைவு அறிவிப்பை சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- NLC இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் அனல் மின் நிலையங்கள் ஆனது அனல் மின் துறையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு வழங்கிய சிறந்தப் பங்களிப்புகளுக்காக 2025 ஆம் ஆண்டிற்கான சிறப்பு சுற்றுச்சூழல் தங்க விருதைப் பெற்றன.
- லடாக் ஆனது சுற்றுலாத் துறை மற்றும் இந்திய வானியற்பியல் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அதன் முதல் வானியற்பியல் சுற்றுலா விழாவை லேவில் நடத்தி வருகிறது.
- சென்னை மற்றும் ஒன்பது மாவட்டங்களில் மூத்தக் குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு (PwDs) பொது விநியோக முறையின் (PDS) கீழ் அத்தியாவசியப் பொருட்களை வீடுகளுக்கே சென்று வழங்குவதற்கான ஒரு முன்னோடித் திட்டத்தை தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் துறை தொடங்கியுள்ளது.
- சென்னை தரமணியில் ராஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் (RMRL) அமைக்கும் தமிழ் அறிவு வளாகம் (TKC) கட்டுமானத்திற்கான அடிக்கல்லை தமிழக முதல்வர் நாட்டினார்.
- தமிழ்நாட்டின் விருதுநகரில் அடுத்த தலைமுறை PM MITRA ஜவுளிப் பூங்காவை நிறுவச் செய்வதற்கு மத்திய அரசு ₹1,900 கோடியை ஒதுக்கியுள்ளது.
- 2027 ஆம் ஆண்டுக்குள் 4 மில்லியன் வீடுகளில் மேற்கூரை சூரிய மின்சக்தி உற்பத்தி அமைப்புகளை நிறுவச் செய்வதற்கான புதிய திட்டத்தை பாரத ஸ்டேட் வங்கி (SBI) வெளியிட்டுள்ளது.
- ஸ்ரீ நானக் நிவாஸ் எனப்படும் மரத்திலான இந்தியாவின் முதல் குருத்வாராவானது (வழிபாட்டுத் தலம்) பஞ்சாபின் ஃபாசில்காவில் கட்டமைக்கப் பட்டுள்ளது.
  - பின்லாந்து தியோதர் மரத்தைப் பயன்படுத்தி கட்டமைக்கப்பட்ட இது SSP பூபிந்தர் சிங் சித்துவால் வடிவமைக்கப் பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## நீர்நிலைகள் புனரமைப்பு மற்றும் பசுமைப் பரவல் அதிகரிப்பு திட்டம் - செங்கல் பட்டு


- செங்கல்பட்டு மாவட்டத்தில் தற்போது சுமார் 500 சிறு நீர்ப்பாசன குளங்கள் உள்ளன என்ற நிலையில் அவற்றுள் சுமார் 200 குளங்கள் 'நீர்நிலைகள் புனரமைப்பு மற்றும் பசுமைப் பரவல் அதிகரிப்புத் திட்டம் - செங்கல்பட்டு' (Mission Blue-Green Chengalpattu) என்ற திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படுகின்றன.
- மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமை (DRDA) ஆனது, மேலும் 388 குளங்களை

புனரமைப்பதற்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

- இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளை (EFI) ஆனது நீடித்த நிலையான முறைகளைப் பயன்படுத்தி 100 குளங்களைப் புனரமைத்து ஒரு முக்கியப் பங்குதாரராக உள்ளது.
- கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் மறுசீரமைப்புக்குத் தாவரங்களின் வேர் மண்டல வடிகட்டுதல் சுத்திகரிப்பு முறையை அது பயன்படுத்தியது.
- இங்கு வடகிழக்குப் பருவமழைக்கு மிக முன்னதாக நீர் கிடைக்கப் பெறும் தன்மையை மேம்படுத்தவதற்காக வேண்டி அக்டோபர் மாதத்தின் தொடக்கத்தில் பெரும்பாலான பணிகளை முடிக்க DRDA இலக்கு நிர்ணயித்துள்ளது.




## 2024/25 ஆண்டு ஆடை ஏற்றுமதி





- 2024-25 நிதியாண்டில் திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலிருந்து மேற்கொள்ளப் பட்ட ஆடை ஏற்றுமதி ₹45,000 கோடியை எட்டியுள்ளது.
- திருப்பூரில் இருந்து செய்யப்பட்ட நேரடி ஆடை ஏற்றுமதியானது கிட்டத்தட்ட ₹40,000 கோடியாகவும், கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து செய்யப்பட்ட ஏற்றுமதி ₹5,000 கோடி மதிப்புடையதாகவும் இருந்தது.
- இது முந்தைய ஆண்டை விட 20% அதிகமாகும்.

- தற்போது, நாட்டின் பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் 68% பங்களிக்கின்றன.

# தேசியச் செய்திகள்

## தொலைபேசி ஒட்டுக் கேட்பு குறித்து உயர்நீதிமன்றம் கருத்து

- ஒரு குற்றத்தைக் கண்டறிவதற்கான தொலைபேசி ஒட்டுக் கேட்பு நடவடிக்கையானது தனியுரிமைக்கான அடிப்படை உரிமையை மீறுவதாக உயர் நீதிமதின்றம் கூறி உள்ளது.
- 1885 ஆம் ஆண்டின் இந்திய தந்திச் சட்டம் ஆனது தொலைபேசி ஒட்டுக் கேட்பை கட்டுப்படுத்துவதற்கான 'இட்சுமண ரேகை' என்ற வரம்பினை நிர்ணயித்தது.
- நீதிமன்றத்தின் பங்கு இந்த வரம்பு மீறப்படுகிறதா இல்லையா என்பதை சரிபார்ப்பது மட்டுமே ஆகும்.
- 1604 ஆம் ஆண்டில் முன் வைக்கப்பட்ட தனியுரிமைக்கான உரிமையானது, 1996 ஆம் ஆண்டு PUCL வழக்கில் உச்ச நீதிமன்றத்தினால் 21வது சரத்தின் கீழ் அங்கீகரிக்கப் பட்டது.
- உரிமையியல் உரிமைகளுக்கான மக்கள் சங்கம் (PUCL) வழக்கின் தீர்ப்பை 2017 ஆம் ஆண்டு K.S. புட்டசாமி வழக்கில் அரசியலமைப்பு அமர்வு உறுதி செய்தது.
- பொது அவசரநிலை அல்லது பொதுப் பாதுகாப்பு வழக்குகளில் மட்டுமே தொலைபேசி ஒட்டுக் கேட்பு அனுமதிக்கப்படுகிறது.
- ஒரு சட்ட அடிப்படை இல்லாததால் இலஞ்ச வழக்கில் அளிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டு தொலைபேசி ஒட்டுக் கேட்பு உத்தரவை நீதிமன்றம் ரத்து செய்தது.




## WAVEX புத்தொழில் நிறுவனங்களுக்கான சவால் 2025

- தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகம் ஆனது WaveX திட்டத்தின் கீழ் WAVEX புத்தொழில் நிறுவனங்களுக்கான சவால் 2025 என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது.
- WaveX ஆனது ஊடகம், பொழுதுபோக்கு மற்றும் மொழி மீதான தொழில்நுட்பத்தில் புத்தாக்கங்களை ஆதரிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில், மும்பையில் நடைபெற்ற WAVES உச்சி மாநாட்டில் 30க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்றன.
- 'பாஷா சேது' என்று பெயரிடப்பட்டுள்ள இது இந்தியாவிற்கான நிகழ்நேர மொழித் தொழில் நுட்பத்தில் கவனம் செலுத்துகிறது.

- 12 இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பு, ஒலிபெயர்ப்பு மற்றும் குரல் தொழில் நுட்பத்திற்கான செயற்கை நுண்ணறிவுக் கருவிகளை உருவாக்குவதற்கு அனைத்துப் புத்தொழில் நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.




## உச்ச நீதிமன்ற ஊழியர்களுக்கான இடஒதுக்கீடுக் கொள்கை




- முதன்முறையாக, இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது பட்டியலிடப்பட்டச் சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) சமூகத்தினைச் சேர்ந்த ஊழியர்களுக்கு வேண்டிய அதிகாரப் பூர்வ இடஒதுக்கீடுக் கொள்கையை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இந்தக் கொள்கையானது உச்ச நீதிமன்றத்தின் உள் நிர்வாகத்தில் உள்ள நேரடி

நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்குப் பொருந்தும்.

- 2025 ஆம் ஆண்டு ஜூன் 23 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள இந்தக் கொள்கையானது, பதிவாளர்கள், மூத்த தனிப்பட்ட உதவியாளர்கள், உதவி நூலகர்கள், இளநிலை நீதிமன்ற உதவியாளர்கள் மற்றும் நீதிமன்ற அவை உதவியாளர்கள் போன்ற பதவிகளுக்கு பொருந்தும்.
- பதவி உயர்வுகளில், SC ஊழியர்களுக்கு 15% இடஒதுக்கீடும், ST ஊழியர்களுக்கு 7.5% இட ஒதுக்கீடும் கிடைக்கப்பெறும்.
- இந்த நடவடிக்கையானது, உச்ச நீதிமன்றத்தின் இரண்டாவது தலைமை நீதிபதியான பட்டியலிடப்பட்ட சாதியினைச் சார்ந்த B.R.கவாய் காலத்தில் தொடங்கப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## FfD4 மாநாடு





- மேம்பாட்டிற்கான நிதியுதவி குறித்த 4வது சர்வதேச மாநாடு (FfD4) ஆனது ஸ்பெயின் நாட்டின் செவில்லா எனுமிடத்தில் நடைபெற்றது.
- உலகளாவிய நிதி விதிகளை மிகவும் நன்கு சீர் செய்வதற்கும், நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்கான (SDG) சுமார் 4 டிரில்லியன் டாலர்கள் இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்குமான செவில்லா உறுதிப்பாட்டை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டன.
- FfD செயல்முறை என்பது நிலையான வளர்ச்சிக்கு, குறிப்பாக ஏழ்மை நிலையில் உள்ள நாடுகளுக்கு நிதியளிப்பதற்கான பல சிறந்த வழிகளைக் கண்டறிவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் (UN) தளமாகும்.
- 2002 ஆம் ஆண்டில் மான்டெர்ரி ஒருமித்த கருத்து உடன்படிக்கையுடன் தொடங்கிய இந்த மாநாடானது, தோஹா (2008), அடிஸ் அபாபா (2015) மற்றும் இப்போது தற்போது செவில்லா (2025) ஆகிய இடங்களில் முக்கியக் கூட்டங்களை நடத்தியது.
- இதில் ஐ.நா. சபையின் அனைத்து உறுப்பினர்களும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் (IMF), உலக வர்த்தக அமைப்பு (WTO) மற்றும் குடிமைச் சமூகம் போன்ற சில குழுக்களும் பங்கேற்றன.
- இந்திய நிதியமைச்சர் மேம்பாட்டிற்கு என்று தனியார் துறைகளின் முதலீட்டினை ஈர்ப்பதற்கான 7 அம்சத் திட்டத்தை மாநாட்டில் முன் வைத்தார்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் SDG இலக்குகளுக்குத் தேவையான முதலீடுகளை ஆதரிக்கவும் அதற்கானத் தடைகளை நீக்கவும் உலகளாவிய நிதி விதிகளைச் சீர்திருத்துவதே FfD4

மாநாட்டின் நோக்கமாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## வங்கிகளின் வாராக் கடன்களின் நிலை

- இந்திய வங்கிகள் ஆனது நிதி ரீதியாக வலுவாகவும் நிலையானதாகவும் இருப்பதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிக்கை காட்டுகிறது.
- பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் மொத்த வாராக் கடன்கள் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 2.3% ஆகக் குறைந்தன.
- நிகர வாராக் கடன்கள் ஆனது வெறும் 0.5% ஆகக் குறைந்தன என்பதோடு இது நிதி இருப்பு தரத்தில் பெரிய முன்னேற்றத்தைக் காட்டுகிறது.
- பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன்கள் ஓராண்டில் 3.7 சதவீதத்திலிருந்து 2.8% ஆகக் குறைந்தன.
- தனியார் துறை வங்கிகளின் வாராக் கடன்கள் சுமார் 2.8 சதவீதத்தில் நிலையானதாக இருந்தன.
- வழக்கமான கடன்கள் வாராக் கடன்களாக மாறும் விகிதமானது சுமார் 0.7 சதவீதத்தில் நிலையானதாக இருந்தது என்பதோடு நிரப்பு நிதி இருப்பு 76.3% ஆக இருந்தது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் காற்று மாசுபாட்டிற்கான மூல ஆதாரம்

- இந்தியாவின் PM2.5 மாசுபாட்டில் அம்மோனியம் சல்பேட் ஒரு முக்கிய இரண்டாம் நிலை மாசுபடுத்தியாக உள்ளது.
- சல்பர் டை ஆக்சைடு ($SO_2$) மற்றும் அம்மோனியா ($NH_3$) காற்றில் வினைபுரியும் போது இது உருவாகிறது.
- இந்த மாசுபடுத்தியானது இந்தியாவின் மொத்த PM2.5 அளவுகளில் சுமார் 34% என்ற பங்கினைக் கொண்டுள்ளது.

- $SO_2$ உமிழ்வின் மிகவும் முக்கிய ஆதாரம் ஆனது நிலக்கரியில் இயங்கும் அனல் மின் நிலையங்கள் ஆகும்.
- இந்தியாவில் $SO_2$ உமிழ்வுகளில் சுமார் 60 சதவீதத்திற்கும் அதிகமானவை இந்த ஆலைகளிலிருந்து வெளியாகின்றன.
- 8% ஆலைகளில் மட்டுமே கனல் வாயு சல்பர் நீக்க (FGD) அமைப்புகள் உள்ளன.
- நிலக்கரி ஆலைகளுக்கு அருகில், அதாவது 10 கிலோ மீட்டருக்குள் சுமார் 2.5 மடங்கு அதிகமான அளவில் மாசுபாடு அதிகமாக உள்ளது.
- காற்று வழியாக பரவும் இந்த மாசுபாட்டால் தொலைதூர நகரங்கள் கூட பாதிக்கப் படுகின்றன.
- மாசுபட்ட 130 நகரங்களில் 114 நகரங்களில் அம்மோனியம் சல்பேட்டிலிருந்து வெளியாகும் மாசுபாட்டினால் 30% PM2.5 அதிகமாகக் காணப்படுகிறது.
- அம்மோனியம் நைட்ரேட்டும், சில நேரங்களில் 50% வரை PM2.5 மாசுபாட்டில் சேர்க்கப் படுகிறது.




## CITES உடன்படிக்கையின் 50வது ஆண்டு

- CITES (அழிந்து வரும் வன விலங்குகள் மற்றும் தாவர இனங்களின் சர்வதேச வர்த்தகம் குறித்த ஒப்பந்தம்) முதலில் 1963 இல் உருவாக்கப்பட்டது.
- இந்தச் சட்டப்பூர்வமாகப் பிணைக்கும் ஒப்பந்தம் 1975 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- இது 40,900க்கும் மேற்பட்ட இனங்களை (6,610 வகையான விலங்குகள் மற்றும் 34,310 வகையான தாவரங்கள்) பாதுகாக்கிறது.
- இந்தியா 1976 ஆம் ஆண்டில் இதை அங்கீகரித்தது.
- தற்போது, இது 185 பங்குதாரர்களைக் கொண்டுள்ளது (நாடுகள் அல்லது பிராந்தியப் பொருளாதார அமைப்புகள்).
- சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டத்தால் (UNEP) இதற்கு செயலக உதவி வழங்கப்படுகிறது.
- இந்தியா 1981 ஆம் ஆண்டில் இதன் பங்குதாரர் மாநாட்டை (CoP3) நடத்தியது.

- CITESல் உள்ளடக்கப்பட்ட உயிர் இனங்கள் அவற்றிற்குத் தேவையானப் பாதுகாப்பின் அளவிற்கு ஏற்ப மூன்று பின் இணைப்புகளில் (I, II &III) பட்டியலிடப்பட்டுள்ளன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## SDG இலக்குகளில் இந்தியாவின் முன்னேற்றம் – 2025




- SDG இலக்குகளில் இந்தியாவின் முன்னேற்றம் குறித்த 2025 ஆம் ஆண்டு அறிக்கை ஆனது புள்ளிவிவரங்கள் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டில் 22% ஆக இருந்த சமூகப் பாதுகாப்பு திட்டங்களின் பரவல் ஆனது 2025 ஆம் ஆண்டில் 64.3% ஆக உயர்ந்தது.
- 2015-16 ஆம் ஆண்டில் சுமார் 61,247 ரூபாயாக இருந்த ஒரு தொழிலாளியின் வேளாண் வருமானம் ஆனது 2024-25 ஆம் ஆண்டில் 94,110 ரூபாயாக உயர்ந்தது.
- கிராமப்புறங்களில் மேம்பட்ட குடிநீருக்கான அணுகல் ஆனது 2024-25 ஆம் ஆண்டில் 99.62% ஆக உயர்ந்தது.
- மொத்த உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்கு 16.02 சதவீதத்திலிருந்து 22.13% ஆக உயர்ந்துள்ளது.

- தனிநபர் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் ஆனது 64.04 வாட் என்ற ஒரு அளவிலிருந்து 156.31 வாட்களாக அதிகரித்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில் 829 ஆக இருந்த கழிவு மறுசுழற்சி ஆலைகள் ஆனது 2024-25 ஆம் ஆண்டில் 3,036 ஆக உயர்ந்துள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் 453 ஆக இருந்த அங்கீகரிக்கப்பட்டப் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் 34,293 ஆக அதிகரித்துள்ளன.
- 0.283 (2011-12) ஆக இருந்த கிராமப்புற கினி குணகம் ஆனது 0.237 (2023-24) ஆகவும், நகர்ப்புறம் 0.284 ஆகவும் குறைந்தது.
- 2005 முதல் 2020 ஆம் ஆண்டு வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உமிழ்வு தீவிரம் 36% குறைந்துள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் 302 மில்லியனாக இருந்த இணைய சந்தாக்கள் 2024 ஆம் ஆண்டில் 954 மில்லியனாக உயர்ந்தன.
- 2015-16 ஆம் ஆண்டில் 17.97% ஆக இருந்த கழிவுகளின் செயல்முறையாக்கம் ஆனது 2024-25 ஆம் ஆண்டில் 80.7% ஆக மேம்பட்டது.
- 2015 ஆம் ஆண்டில் சுமார் 21.34% ஆக இருந்த வனப்பகுதியின் பரவல் ஆனது 2023 ஆம் ஆண்டில் 21.76% ஆக அதிகரித்தது.


## உலக நாடுகளின் கடன் குறித்த அறிக்கை 2025




- வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு அமைப்பு (UNCTAD) ஆனது, அதிகரித்து வரும் உலகளாவியப் பொதுக் கடனை எடுத்துக்காட்டும் வகையில் 2025 ஆம் ஆண்டு உலக நாடுகளின் கடன் அறிக்கையினை வெளியிட்டது.
- உலகளாவியப் பொதுக் கடன் (GPD) ஆனது, 2024 ஆம் ஆண்டில் இதுவரையில் இல்லாத அளவான 102 டிரில்லியன் டாலரை எட்டியது.
- இந்தப் போக்குகள் இனியும் தொடர்ந்தால், 2030 ஆம் ஆண்டிற்குள் கடன் பங்கானது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 100 சதவீதத்தினை எட்டக்கூடும்.
- வளர்ந்து வரும் நாடுகள் 31 டிரில்லியன் டாலர் மதிப்பிலான கடனை கொண்டுள்ளன, ஆனால் அவற்றின் கடன் 2010 ஆம் ஆண்டு முதல் வளர்ச்சியடைந்த நாடுகளை விட இரண்டு மடங்கு வேகமாக வளர்ந்து வருகிறது.

- ஆசியா மற்றும் ஓசியானியா ஆகியப் பகுதிகள் உலகளாவியப் பொதுக் கடனில் 24% பங்கினைக் கொண்டுள்ளன என்பதோடு இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் 5% பங்கினையும்; ஆப்பிரிக்கா 2% பங்கினையும் கொண்டுள்ளன.

## நிதி நிலைத்தன்மை அறிக்கை 2025




- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI), 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான, ஆண்டிற்கு இருமுறை வெளியாகும் நிதி நிலைத்தன்மை அறிக்கையை (FSR) வெளியிட்டது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி மொத்த வாராக் கடன்கள் (GNPA) 2.3% ஆக இருந்தது.
- கணிப்பு சூழ்நிலையில் GNPA ஆனது 2.5% ஆக உயரக்கூடும்.
- பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் (SCB) சுமார் 98% சொத்துக்களை உள்ளடக்கிய 46 வங்கிகளுக்கு, 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் GNPA 2.6% ஆக அதிகரிக்கக் கூடும்.

# மாநிலச் செய்திகள்

## பீகார் - இணைய வழி வாக்களிப்பு 2025





- நகராட்சித் தேர்தல்களின் போது கைபேசிகளைப் பயன்படுத்தி வாக்களிக்கும் முதல் மாநிலமாக பீகார் மாற உள்ளது.

- தேர்தல் நடைபெற்ற மாவட்டங்களில் பாட்னா, பக்சர், ரோஹ்தாஸ் மற்றும் கிழக்கு சம்பாரண் ஆகியவை அடங்கும்.
- வழக்கமான மின்னணு வாக்களிப்பு முறையுடன் சேர்த்து கூடுதலாக, இதில் சில வாக்காளர்கள் கைபேசி செயலி மூலம் வீட்டிலிருந்தே வாக்களிக்க முடிந்தது.
- இந்த வசதியானது சாவடிகளுக்குச் செல்வதில் சிரமப்படும் முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கப்பட்டது.
- திருமதி பிபா குமாரி நாட்டின் முதல் இணைய வழி வாக்கைப் பதிவு செய்ததுடன், உள்ளாட்சித் தேர்தல்களில் இணைய வழி வாக்களிப்பு என்ற புதியதொரு வரலாறு உருவாக்கப் பட்டது.
- அவர் கிழக்கு சம்பாரண் மாவட்டத்தில் உள்ள பக்ரிதயலில் வசிப்பவர்.
- அதே மாவட்டத்தைச் சேர்ந்த முன்னா குமார் என்பவர் இணைய வழி வாக்களிப்பில் பங்கேற்ற முதல் ஆண் வாக்காளர் ஆவார்.
- தகுதியுள்ள வாக்காளர்கள் E-SECBHR செயலியை நிறுவி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட கைபேசி எண்ணை அதனுடன் இணைக்கலாம்.
- இந்த செயலியை மேம்பட்ட கணினி உருவாக்க மையம் (C-DAC) உருவாக்கியது.
- இதில் இரண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் மட்டுமே ஒரு கைபேசி எண்ணைப் பயன்படுத்தி உள்நுழைய அனுமதிக்கப் படுகிறார்கள் என்பதோடு மேலும் ஒவ்வொரு வாக்காளரின் சரிபார்ப்பும் வாக்காளர் அடையாள எண்ணை உள்ளிடுவதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
- இதிலுள்ள மற்றப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர் சங்கிலி தொழில்நுட்பம், முக அடையாளப் பொருத்தம் மற்றும் வரியோட்ட ஆய்வு (ஸ்கேனிங்) போன்றப் பல்வேறு அம்சங்களைப் பயன்படுத்துகின்றன.

# முக்கிய தினங்கள்

## தேசிய மருத்துவர் தினம் 2025 - ஜூலை 01




- இந்தியாவில் உள்ள மருத்துவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தினை இந்த நாள் கௌரவிக்கிறது.
- இந்த நாள் மருத்துவர், சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் முன்னாள் மேற்கு வங்க முதல்வரான டாக்டர் பிதன் சந்திர ராயின் பிறப்பு மற்றும் இறப்பு ஆண்டு நிறைவையும் நினைவு கூருகிறது.

- இந்திய மருத்துவச் சங்கம் மற்றும் இந்திய மருத்துவக் கழகத்தினை நிறுவுவதில் அவர் முக்கியப் பங்கு வகித்தார்.
- இந்த ஆண்டின் கருத்துரு "Behind the Mask: Who Heals the Healers?" என்பதாகும்.

### SBI தினம் 2025 - ஜூலை 01

- ஜூலை 1, 1955 அன்று உருவாக்கப்பட்ட பாரத ஸ்டேட் வங்கியானது (SBI), சரியாக 70 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- 1806 ஆம் ஆண்டில், கல்கத்தா வங்கி நிறுவப்பட்டது பின்னர் அது வங்காள வங்கி என மறுபெயரிடப்பட்டது.
- இதைத் தொடர்ந்து பம்பாய் வங்கி (1840) மற்றும் மெட்ராஸ் வங்கி (1843) ஆகியவை உருவாக்கப்பட்டன.
- 1921 ஆம் ஆண்டில், இவை மூன்றும் இணைக்கப்பட்டு இந்திய இம்பீரியல் வங்கி என்று உருவாக்கப்பட்டது.
- ஜூலை 1, 1955 அன்று, பாரத ஸ்டேட் வங்கிச் சட்டத்தின் கீழ் ஸ்டேட் வங்கியாக இது உருவாக்கப்பட்டது.
- பின்னர் பல்வேறு காலக் கட்டங்களில், எஸ்பிஐ வங்கியானது, பீகார் வங்கி, தேசிய லாகூர் வங்கி, கொச்சின் வங்கி, சவுராஷ்டிரா ஸ்டேட் வங்கி மற்றும் இந்தூர் ஸ்டேட் வங்கி உள்ளிட்ட பல வங்கிகளை தன்னுடன் இணைத்துக் கொண்டது.




## இதரச் செய்திகள்

### ஹல் திவாஸ் 2025

- 1855 ஆம் ஆண்டு சந்தால் கிளர்ச்சியைக் கௌரவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 30 ஆம் தேதியன்று ஹல் திவாஸ் அனுசரிக்கப்படுகிறது.
- பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக பழங்குடியினத் தலைவர்கள் சித்து மற்றும் கன்ஹு முர்மு தலைமையில் இந்தக் கிளர்ச்சி நடைபெற்றது.
- இன்றைய ஜார்க்கண்டில் உள்ள போக்னாதி கிராமத்தினைச் சேர்ந்த சந்தாலர்கள் கிளர்ந்தெழுந்தனர்.
- இந்த ஒரு எழுச்சிக்கு சித்து மற்றும் கன்ஹுவின் சகோதர சகோதரிகளின் ஆதரவும் இருந்தது என்பதோடு இந்தக் கிளர்ச்சியில் அவர்களும் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தனர்.
- 1832 ஆம் ஆண்டில் சந்தாலர் பழங்குடியினருக்கு ஆங்கிலேயர்களால் நிலம் வழங்கப்

படும் என்று ஒரு வாக்குறுதி அளிக்கப்பட்டது ஆனால் ஜமீன்தார்கள் மற்றும் கடன் கொடுப்பவர்களால் அவர்கள் பெரும் சுரண்டலை எதிர்கொண்டனர்.

- ❖ காலனித்துவ ஒடுக்குமுறைக்கு எதிரான பழங்குடியினரின் ஒரு போராட்டத்தையும் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் அவர்களின் பங்கையும் இந்த ஹல் திவாஸ் கௌரவிக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★